# ECHO OF HIS CALL

ECHO OF HIS CALL
REACHING NATIONS
SINCE 1969
1969 TO 2029

# அழைப்பின் எதிரொலி

Tamil
₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXX | YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 NOVEMBER | No. 11


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 96:7- 13

7. ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.

8. கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள்.

9. பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்.

10. கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார். ஆகையால் பூச்சக்கரம் அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்; அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.

11. வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக.

12. நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக; அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டுவிருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும்.

13. அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

## விழித்திருங்கள்!

சகோதரி ஏஞ்சல்



உன்னதத்திலுள்ள சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும் நம்மை ஆசீர்வதித்த நமது ஆண்டவரும், இரட்சகருமான, உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது **அழைப்பின் எதிரொலி பத்திரிகையின்** மூலம் உங்களுடன் இணைவது எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்கள் ஆத்துமா கிறிஸ்து இயேசுவில் செழிப்பதுபோல, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் நீங்கள் செழிக்க வேண்டும் என்பதே எனது ஜெபம்.

2025 ஆம் ஆண்டின் முடிவுக்கு நாம் இப்போது நெருங்கி வந்துவிட்டோம். இந்த ஆண்டு எவ்வளவு விரைவாக கடந்து விட்டது! நாம் திரும்பிப் பார்க்கும்போது சிந்திக்க நிறைய இருக்கிறது. ஒரு பலன் நிறைந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டை அனுபவித்த அனைவருக்காகவும் நான் ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன். மேலும், சவால்களை எதிர்கொண்டவர்களுக்காக நான் ஜெபம் செய்கிறேன். இதுவரை விடாமுயற்சியுடன் நீங்கள் செயல்பட்டு வந்ததற்குப் பாராட்டுக்கள். உண்மையாகவே, கர்த்தரே நம்முடைய பலம்!

குறிப்பாக எங்கள் குடும்பத்திற்கு இந்த ஆண்டு மிகவும் சவாலான ஆண்டாகும். என் பெற்றோருக்கு ஒரு அன்பான மகனும், கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியனுமான என் சகோதரனின் (போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்) வேதனையான இழப்பை நாங்கள் அனுபவித்தோம். இருப்பினும், தேவனுடைய கிருபை எங்களுக்கு போதுமானதாக இருந்தது. இந்த கடினமான காலங்களில் எங்களுடன் துணை நின்ற உங்கள் அனைவருடைய ஜெபங்களுக்கும் நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன்.




அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

★ பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் ★

ECHO OF HIS CALL REACHING NATIONS SINCE 1969
1969 TO 2029

# ECHO OF HIS CALL - (Marching towards 60th year)

Estd. 1969



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**Ex MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A, M.Sc(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc, M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org

**YOUTUBE CHANNEL**
Echo of His Call

*கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். சங்கீதம் 31:24*

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே!



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமம் மகிமைப்படுவதாக! அவர் உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

கடந்த மாதம், நம் ஊழியங்கள்மேல் தேவகரம் நம்மோடு இருந்து வழிநடத்தியது. நமது அச்சு இயந்திரத்தில் ஏற்பட்டக் கோளாறுகள், நம் உடன் ஊழியர் பலருடைய சரீர சுகவீனங்கள், குடும்பத் தேவைகள் இவற்றில் நம் ஊழிய வேகமானது சற்று குறைந்தது போலத் தோன்றியது. ஆனால், தேவன் தம்முடைய பலத்த கிரியைகளினால் எல்லாப் பாடுகளையும் கஷ்டங்களையும் நன்மைகளாக மாற்றினார். ஆகவே, புதிய உத்வேகத்துடன் தேவ ஊழியங்களைத் தொடருகிறோம்.

கடினமாக உழைக்கிற நம் சபை ஊழியர்கள், பணித்தள ஊழியர்கள், அச்சகப் பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளில்** பணியாளர்கள், **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** பணியாளர்கள் – இவர்கள் யாவர் மேலும் தேவகரம், தொடர்ந்து வல்லமையாக இறங்கும்படி உங்கள் ஊக்கமான ஜெபம் மிக அத்தியாவசியமாக இருக்கிறது.

போதுமான, தகுதியுள்ள ஊழியர்கள் குறைவினால், நம் தலைமைப் போதகரின் சுயசரிதை, முழுநேர இந்தி வேதாகமக் கல்லூரி வளர்ச்சிப் பாதை, நிர்வாகத் துறைகள், சபைகளின் வளர்ச்சியில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, ஓய்வு பெற்ற அரசு மற்றும் ஊழியப் பணியாளர்கள் முன்வந்து நம் ஊழியங்களில் கரம் கொடுக்க பலரை தேவன் எழுப்பித்தர உங்கள் ஜெபம் தேவைப்படுகிறது.

நாட்கள் செல்லச் செல்ல, தேவ ஊழியங்கள் தங்கள் அடிப்படை உபதேசங்களில் இருந்துப் பின்வாங்கி உலகப் பிரகாரமான எண்ணங்களுக்கும், வழிமுறைகளுக்கும் இடம் அளித்து விட்டதைப் பார்க்க முடிகிறது. எனவே, தேவனாகிய கர்த்தர், மனுக்குலத்தின்மேல் மனமிரங்கி ஓர் ஆவிக்குரிய பின் மாரியை ஊற்றும்படியாகவும் நாம் எல்லாரும் கூப்பாடுகளை மறந்து ஏகமனதாக இணைந்து செயல்படவும் தேவன் உதவிபுரிவாராக.

உங்களுக்காகவும், உங்கள் சார்பிலும் முன்வரிசையில் நின்று சத்துருவின் கோட்டைகளை உடைத்து போர்புரியும் எங்களுக்காகவும் அனைத்து ஊழியர்கள் மற்றும் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கும்படியும் பணிவன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் நல்லவர். ஆமென்.

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியன்,**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.** மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

---

கடந்த மாதம், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக நம் இருதயங்களைக் காத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தைக் குறித்து நான் எழுதினேன். "காத்துக்கொள்ளுதல் (Gurd)" என்ற வார்த்தையை நான் தியானித்தபோது, தேவன் நம்மிடம் ஒப்படைத்தவைகளுக்கு நம்மைக் காவலாளிகளாக இருக்க நம் ஒவ்வொருவரையும் அழைத்திருப்பது எனக்கு நினைவூட்டப்பட்டது. எசேக்கியேல் 3:17இல், **மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்.** ... என்று நாம் வாசிக்கிறோம். தேவன் நம்மை நம் குடும்பங்கள், நமது தேவாலயங்கள், நமது நகரங்கள் மற்றும் நமது தேசங்களின் மீது காவல்காரர்களாக வைத்துள்ளார்.

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) · BIBLECOR - Postal Courses (3 languages) · YouTube Ministry · Online Courses · Theological Correspondence Courses (2 languages) · Church Planting · Nehemiah Bible Colleges · Gospel Printing Press · Great Commission Partners · St. Paul's Matriculation School · Crusades · Community Development



**தேவன் நம்மை நம் குடும்பங்கள், நமது தேவாலயங்கள், நமது நகரங்கள் மற்றும் நமது தேசங்களின் மீது காவல்காரர்களாக வைத்துள்ளார்**

ஒரு காவலாளி அமைதியாக இருக்க முடியாது. வேதம் கூறுகிறது, **எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல் முழுதும் இரா முழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது.** ஏசாயா 62:6. இயேசு கிறிஸ்து விரைவில் வருகிறார். நாம் அமைதியாக இருக்க முடியாது.

ஒரு உண்மையுள்ள காவலாளி மிகுந்த விழிப்புடன் ஆபத்தின் ஒரு லேசான சலசலப்பைக்கூடப் பார்க்கவும், கேட்கவும், கண்டறியவும் வேண்டும். நாம் ஆவிக்குரிய விழிப்புடன் இருக்க அழைக்கப்பட்டு இருக்கிறோம். மேலும், ஆபத்தைக் காணும்போது எச்சரிக்கை ஒலி எழுப்ப வேண்டும். விழிப்புடன் இருங்கள்! கவனமாக இருங்கள்! வரவிருக்கும் விஷயங்களுக்கு உண்மையுடன் மற்றவர்களை எச்சரித்து தயார்படுத்துவோம்.

எசேக்கியேல் 33:6–ல், **நாம் மற்றவர்களை எச்சரிக்கத் தவறினால், அவர்களின் இரத்தப்பழி நம் கைகளில் இருக்கும்** என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. எரேமியா 51:12, **காவலரைப் பலப்படுத்தவும், காவலாளிகளை நிறுத்தவும்** நம்மை அறிவுறுத்துகிறது.

இந்தப் பொறுப்பு மற்றவர்களை எச்சரிப்பது மட்டுமல்ல, நம் சொந்த வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும் பொருந்தும். தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கத்திலிருந்து நம்மை விலக்கக்கூடிய எண்ணற்ற கவனச்சிதறல்களும், சோதனைகளும் உள்ளன. நாம் விழிப்புடன் இல்லாவிட்டால், எளிதில் விழுந்துவிடலாம். நாம் கர்த்தருடைய ஜாமக்காரர்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ளோம்!

ஆனால், இங்கே ஒரு முக்கியமான கேள்வி: தேவன் நம்மைப் பாதுகாக்க அழைத்தபடி நாம் உண்மையிலேயே காவல் காக்கிறோமா ?

ஒரு உண்மையுள்ள காவலாளியின் சில முக்கிய குணங்கள் கவனம் அல்லது எச்சரிக்கை (Alert), நுண்ணறிவு (Aware), விழிப்புணர்வு (Awake).

கவனம் அல்லது எச்சரிக்கை (Alert) என்றால் சிறிய மாற்றம் அல்லது அசைவிற்குக்கூட உணர்திறன் கொண்டவராக இருப்பதாகும்.

**நுண்ணறிவு அல்லது அறிவு நுட்பம்** (Aware) என்பது நாம் பாதுகாக்கும் பகுதியின் பலங்கள், மற்றும் பலவீனமான இடங்களைக் கண்டறிந்து, அதன் சாத்தியமான பாதிப்புகளையும் அறிந்து கொள்வது.



**நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய நுட்பமான அறிவும், எச்சரிக்கை உணர்வும் நம்மிடம் இருக்க வேண்டும்**

விழிப்புணர்வு (Awake) என்பது மிக முக்கியமான ஒன்று. நாம் விழித்திருக்கவில்லை என்றால் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய நுட்பமான அறிவோ, எச்சரிக்கை உணர்வோ நம்மிடம் இருக்காது.

இந்தக் கடைசி நாட்களில், தேவன் நம்மை ஆவிக்குரிய வாழ்க்கையில் விழித்திருக்கவும், நுண்ணறிவுடன் இருக்கவும், எச்சரிக்கையுடன் இருக்கவும் அழைக்கிறார்.

## 1. ஆனால் நித்திரை செய்பவர்கள் யார்?



மத்தேயு 13:15இல் இயேசு கிறிஸ்து நமக்கு இதற்கான பதிலைக் கொடுக்கிறார்.

**... அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே.**

வேறு வார்த்தைகளில் சொன்னால், இவர்கள் இருதயங்கள் கடினமடைந்த மக்கள். அவர்கள் அன்பு, நம்பிக்கை மற்றும் நீதியின் செய்தியைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தங்கள் பாதையை மாற்ற மறுக்கிறார்கள். ஆம்ப்ளிஃபைட் ஆங்கில வேதாகமம் (Amplified) கூறுகிறது, **அவர்கள் (இறுக்கமாக) தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். அவர்கள் பார்க்க விரும்பவில்லை.**

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
**10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India**
**Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org**

இத்தகையவர்களையே இயேசு கிறிஸ்து, அவர்கள் **தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது** என்று விவரித்தார்.




**நம் இருதயங்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிசாய்க்கவேண்டும்**

நம் இருதயங்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிசாய்க்கவில்லை என்றால், நாம் ஆவிக்குரிய வாழ்வில் நித்திரையில் இருக்கிறோம் என்று பொருள். கர்த்தர் சொல்வதை நாம் கேட்கவும், தேவனுடைய காரியங்களை பார்க்கவும் முடியாவிட்டால், நாம் ஆவிக்குரிய வாழ்வில் நித்திரையில் இருந்து பாதிக்கப்படக்கூடியவர்களாயிருக்கிறோம்.

## 2. நாம் நித்திரை செய்தால் என்ன நடக்கும்?

மத்தேயு 13–ல், ஒரு நில உரிமையாளர் தனது வயலில் நல்ல விதைகளை விதைத்து, அதைப் பாதுகாக்கும்படி தனது வேலைக்காரர்களிடம் ஒப்படைத்த ஒரு சக்திவாய்ந்த உவமையைக் காண்கிறோம். ஆனால், காவலாளிகள் நித்திரை செய்தபோது எதிரி அமைதியாக வந்து,



**காவலாளிகள் நித்திரை செய்தபோது எதிரி அமைதியாக வந்து, கோதுமையின் மத்தியில் களைகளை விதைத்து, யாரும் கவனிக்கும் முன்பு நழுவிச் சென்றான்**

கோதுமையின் மத்தியில் களைகளை விதைத்து, யாரும் கவனிக்கும் முன்பு நழுவிச் சென்றான். பின்னர், செடிகள் வளரத் தொடங்கியதும், வேலையாட்கள் கோதுமையும், களைகளும் ஒன்றாக முளைப்பதைக் கண்டார்கள்.

**மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்**. மத்தேயு 13:25.

## 3. நித்திரையின்போது சத்துரு வந்தான்!

இந்த வசனத்தை ஆழமாகச் சிந்திப்போம்: அவர்கள் நித்திரை பண்ணுகையில், சத்துரு வந்தான்!

அமைதியான இரவின்போது யார் நுழைந்தார்கள்? சத்துரு!

காவலாளிகளாக, நாம் விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் நித்திரை செய்யும்போது, அறிவின் நுட்பத்தை இழக்கிறோம். சத்துரு இத்தகைய நமது பாதுகாப்பற்ற தருணங்களைப் பயன்படுத்திக் கொள்கிறான். அதனால்தான்,

**வேதம் நம்மைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதாவது:**

**... விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்** ... மத்தேயு 26:41.

**கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்** ... மத்தேயு 7:15.

**... எச்சரிக்கையாயிருங்கள் ...** லூக்கா 12:15.

**... ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்**. கொலோசெயர் 4:2.

**... விழித்திருங்கள்**. மத்தேயு 24:42.

இந்த வசனங்கள் அனைத்தும் விழித்திருப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இருப்பினும் இந்த உவமையில், வேலைக்காரர்கள் தூங்கிவிட்டார்கள். அப்போதுதான் எதிரி அவர்களைப் பார்வையிட்டான்.

அன்பான நண்பர்களே! நாம் கவனக்குறைவாகவோ, திசை திருப்பப்பட்டோ அல்லது ஆவிக்குரிய வாழ்வில் நித்திரை செய்துகொண்டிருக்கும்போதுதான் எதிரி எப்போதும் தாக்க வகைதேடுகிறான். அவன் ஒரு கர்ஜிக்கும் சிங்கத்தைப் போல சுற்றித் திரிகிறான். பாய்ந்து, நம்மை இடறச்செய்து, நம்மைத் தாக்க சரியான தருணத்திற்காகக் காத்திருக்கிறான். அதனால்தான் நாம் கவனத்துடன் இருக்க வேண்டும்.

நாம் எவ்வாறு ஆவிக்குரிய வாழ்வில் விழித்திருந்து கர்த்தரின் சத்தத்திற்கு உணர்வுள்ளவர்களாக இருக்க முடியும்? அவருடன் நெருக்கமான மற்றும் நிலையான உறவைப் பராமரிப்பதன் மூலம். கர்த்தருடனான நமது உறவு காலத்திற்கேற்றார் போலவோ அல்லது அரை மனதுடன் இருந்தால், நம்மையும், நம் குடும்பங்களையும், நம் திருச்சபைகளையும், நம் நகரங்களையும் அல்லது நம் தேசங்களையும் நாம் பாதுகாக்க முடியாது.

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை

Diploma in Theology &
Bachelor of Theology

போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)

உடனே அணுகவும் !

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.

தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org / இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

பகிர்தல் (Share) (கலாத்தியர் 6:2), உதவி செய்தல் (Support) (ரோமர் 12:13) மற்றும் துரிதப்படுத்துதல் (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2025 நவம்பர் 19 முதல் டிசம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1980

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

- நவம்பர் 19 ⇨ நமது பன்மொழி ஊழிய செயல்பாடுகளை பாதுகாத்திடும் கிருபைக்காக …
- நவம்பர் 20 ⇨ நம் அனைவரையும் அன்போடும் மற்றும் பாசத்தோடும் ஆசீர்வதித்து வருகிறதற்காக …
- நவம்பர் 21 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக …
- நவம்பர் 22 ⇨ கடந்த மாதத்தில் மேன்மையாய் நம்மை வழிநடத்திய கிருபைக்காக …
- நவம்பர் 23 ⇨ நமது களப்பணி விசுவாசிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரையும் ஆசீர்வதித்து வருவதற்காக …
- நவம்பர் 24 ⇨ நமது சபைகளின் எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக …
- நவம்பர் 25 ⇨ நமது அனைத்து பணியாளர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் ஆசீர்வதித்து வருவதற்காக …
- நவம்பர் 26 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக …
- நவம்பர் 27 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் அனைத்து செயல்பாடுகளிலும் கர்த்தரின் கரங்கள் இருப்பதற்காக …
- நவம்பர் 28 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளில் நடத்தப்படும் சிறுவர் ஞாயிறு பள்ளி மூலமாக அதிக குழந்தைகளை ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக …
- நவம்பர் 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப் ஊடக ஊழியங்கள் மூலமாக சந்திக்கப்படாத பகுதிகளில் சுவிசேஷம் பரவச் செய்த கிருபைக்காக …
- நவம்பர் 30 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக …
- டிசம்பர் 01 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்காக …
- டிசம்பர் 02 ⇨ நமது மருத்துவ ஊழியத்தில் கர்த்தர் நடத்தி வரும் அற்புதங்களுக்காக …
- டிசம்பர் 03 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு அர்ப்பணிப்புடன் ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்களை கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக …

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

- டிசம்பர் 04 ⇨ இந்த தலைமுறையைச் சேர்ந்த இளம் பருவத்தினர் மற்றும் சிறுவர்களுக்காக ஜெபிக்கின்ற **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தில்** ஏராளமான மக்கள் பங்கேற்க வேண்டி …
- டிசம்பர் 05 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப் ஊடக ஊழியங்கள் மூலமாக ஏராளமானவர்கள் இரட்சிப்பிற்குள் வழிநடத்தப்பட வேண்டி …
- டிசம்பர் 06 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளின் விசுவாசிகளுக்கு தேவபாதுகாப்பும், நல்ல ஆரோக்கியமும் கிடைக்க வேண்டி …
- டிசம்பர் 07 ⇨ உலகளாவிய அளவில் கிறிஸ்துவ ஊழியங்களில் எழுப்புதல் வரவேண்டி …
- டிசம்பர் 08 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க …
- டிசம்பர் 09 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும் …
- டிசம்பர் 10 ⇨ அனைத்து சபைகளின் ஒற்றுமைக்காக …
- டிசம்பர் 11 ⇨ உலகளாவிய அளவில் புயல், நிலநடுக்கம் போன்ற இயற்கை பேரழிவு உண்டாகாமல் இருக்கவேண்டி …
- டிசம்பர் 12 ⇨ இளம் பருவத்தினரிடையே செயல்படுகின்ற தற்கொலையின் ஆவி நீக்கப்பட …
- டிசம்பர் 13 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நேகேமியா வேதாகமக் கல்லூரியின்** ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவ பாதுகாப்பு அளித்து வரும் கிருபைக்காக …
- டிசம்பர் 14 ⇨ உலகளாவிய அளவில் போதகர்களுக்கும் களப் பணியாளர்களுக்கும் தேவ பாதுகாப்பு அளிக்க வேண்டி …
- டிசம்பர் 15 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபை உறுப்பினர்களின் தேவைகளுக்காக …
- டிசம்பர் 16 ⇨ அலுவலகத்திற்கு தகுதியான புதிய பணியாளர்கள் நியமிக்கப்பட …
- டிசம்பர் 17 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப் பணியாளர்களும் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட …
- டிசம்பர் 18 ⇨ உலக தேசங்கள் அனைத்தும் ஒற்றுமையாகவும் மற்றும் அமைதியாகவும் வாழ்ந்திட …

... 4-ம் பக்கத் தொடர்ச்சி



கர்த்தருடன் நெருக்கமான மற்றும் நிலையான உறவைப் பராமரிக்கவேண்டும்

## 4. வார்த்தை – மத்தியில்!

நாம் கண்ட உவமையில் உள்ள மற்றொரு குறிப்பிடத்தக்க வார்த்தை 'மத்தியில்' என்ற வார்த்தை. எதிரி எங்கே களைகளை விதைத்தான்? தொலைவில் இல்லை, வேறு வயலில் அல்ல, நல்ல விதைகளுக்கு மத்தியில். எதிரிக்கு எப்போது, எங்கு தனது களைகளை நட வேண்டும் என்பது சரியாகத் தெரியும். அது ஆண்டவர் நட்டவற்றின் மத்தியிலும், அதே பருவகாலத்திலும் என்பதாகும்.

உவமையில் விதைப்பவரின் எதிரியைப் போலவே, அவன் தாக்க சரியான தருணத்திற்காகக் காத்திருந்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். விதைகளுக்கு இடையில் களைகள் வளர்ந்து, அவற்றின் உயிரை நெரிப்பதை நாமும் அடிக்கடி காண்கிறோம். களைகள் ஊட்டச்சத்தை உறிஞ்சி, வளர்ச்சியைத் தடுத்து ஆரோக்கியமான தாவரங்களை அழிக்கின்றன. அவை காட்டுத்தீ போல வேகமாகப் பரவுகின்றன.




விழிப்புணர்வு இன்மையால் திருடுபோகும் மகிழ்ச்சி, அமைதி மற்றும் ஆரோக்கியம்

அதேபோல், நம் வாழ்க்கையிலும், குடும்பத்திலும், சபையிலும், நண்பர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில்கூட களை களைக் காண்கிறோம். இந்த களைகள் நம் மகிழ்ச்சி, அமைதி மற்றும் ஆரோக்கியத்தைத் திருட முயற்சிக்கின்றன.

மேலும் அவை பொய்கள் மற்றும் ஏமாற்றுதல் மூலம் உறவுகளை சேதப்படுத்து கின்றன. அதனால்தான், பிசாசின் திட்டங்கள் மற்றும் உத்திகளை அடையாளம் காண நமக்கு பகுத்தறிவின் ஆவி தேவை.

இயேசு கிறிஸ்து மக்களுடன் இருந்தபோது, அவர் அவர்களின் எண்ணங் களை அறிந்திருந்தார் அல்லது அவர்களின் தீய எண்ணங்களை அறிந்திருந்தார் என்று வேதம் கூறுகிறது. காவல்காரர்களாக, நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் நாம் விழிப்பு டன் இருக்க வேண்டும். **ஆடுகளை ஓநாய்க ளுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்** என்று இயேசு எச்சரித்தார். **ஆகையால், சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.** (மத்தேயு 10:16).



சர்ப்பங்களைப் போல வினாவுள்ள வர்களும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்

பரிசுத்த ஆவியானவர் நம்மை எல்லா சத்தியத்திலும் வழிநடத்துபவர். எனவே, அவருடைய உள்ளார்ந்த பிரசன்னத்தை நாம் மதிக்க வேண்டும். நம்மை வழிநடத்த அவரை நம்பியிருப்பது அவசியம். நல்ல மனிதர்களிடையே, எப்போ தும் தீய நோக்கமுள்ளவர்கள் இருப்பார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும், பெரும்பாலும் அவர்களை வேறு படுத்துவது எளிதல்ல. பல சமயங்களில், அத்தகைய மக்களால் காயப்படுத்தப் படுபவர்கள் கருணையுள்ள, அக்கறையுள்ள மற்றும் இரக்கமுள்ளவர்களே. அதனால் தான், நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏமாற்றப்படாதீர்கள். யாரும் உங்களைப் பயன்படுத்திக் கொள்ள விடாதீர்கள்.

## 5. அவர்கள் வளரட்டும்!

உவமையில் ஒரு குறிப்பிடத்தக்க விவரம் என்னவென்றால், விதையும் களையும் ஒரே மாதிரியாகத் தோன்றலாம். வசனம் 13:26–ல் **பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது.** கோதுமையும், களைகளும் ஒன்றாக வளர ஆரம்பித்தன. – ஒரே நேரத்தில் வளர்ந்து கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத் தோன்றின என்று வாசிக்கிறோம். இந்த குறிப்பிட்ட களைகள் என்பது 'டார்னல்' என்று வேத பண்டிதர்கள் விளக்குகின்றனர். இது கோதுமையை போலவே தோற்றமளிக்கும் ஒரு செடி. இரண்டையும் எளிதில் அடையாளம் காண்பது கடினம்.

குழப்பமடைந்த ஊழியர்கள், உரி மையாளர்களிடம் சென்று கேட்டார்கள். ... **நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர்**

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. கிளைச்சபைகள் – (சந்தோஷபுரம், பாலாஜி நகர் & வேளச்சேரி)
7. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
8. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
9. சுவிசேஷக் கூட்டங்கள்
10. கைப்பிரதி விநியோகம் – தொடர் ஊழியம்
11. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
12. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
13. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
14. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
15. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
16. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
17. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
18. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
20. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
21. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
22. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
23. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
24. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
25. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
26. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
27. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
28. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
29. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
30. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
31. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
32. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
33. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
34. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
35. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி


தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

# குழிக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)



## ஆகாய விமானம் தந்த பாடம்!

**பெருநெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான்; கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். — நீதி மொழிகள் — 28:25.**

1970–ம் ஆண்டுகளில் ஒரு நாள் சென்னை நகருக்கு வெளியே சுமார் 30 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள நாசரேத்துப் பேட்டை என்ற சிறு கிராமத்தில் ஒரு ஏழை சகோதரி அசுத்த ஆவியால் அலைக்கழிக்கப்பட்டு, மருத்துவர்களால் தீர்க்கமுடியாத பல வியாதிகளினால் மிகுந்த வேதனைக்குள்ளாகியிருந்தபடியினால் எனது நண்பர் ஒருவர் ஜெபிக்கும்படியாக என்னை அங்கு அழைத்துச் சென்றார். மாலை நேரமாகிவிட்டபடியால் நான் அன்று இரவு முழுவதும் அங்கு தங்கி ஆண்டவரிடம் ஜெபித்தேன். தேவன் அவர்களுக்கு அற்புதவிடுதலையைக் கொடுத்து நல்ல சுகம் அளித்தார்.

மறுநாள் காலையில் அங்கிருந்து புறப்பட்டு, என்னிடம் இருந்த கொஞ்சப்பணத்தைக் கொண்டு எனது காலை உணவை அருந்தி விட்டு அங்கிருந்து என் வீட்டுக்கு வருவதற்குரியப் பேருந்துக்கட்டணம் என்னிடம் இல்லை என்பதை உணர்ந்தேன். நான் அதைப் பொருட்படுத்தாமல் என்னிடம் இருந்த சுவிசேஷக் கைப்பிரதிகளை எடுத்து வழி நெடுகிலும் வினியோகித்துக் கொண்டே நடந்து வந்தேன். சற்று நேரம் கழித்து பசியும், சரீரத் தளர்ச்சியும் என்னை மேற்கொள்ள ஆரம்பித்தன.

திடீரென தேவ ஆவியானவர் என் வீட்டிற்கு நேராகச் செல்ல அனுமதிக்காமல் வேறு ஒரு திசையில் உள்ள தாம்பரம் என்னும் இடத்தில் ஏழை மக்கள் மத்தியில் ஜீவமார்க்கம் என்னும் தேவ சபையை நடத்திக்கொண்டிருந்த போதகர் ஆபேத்நேகோ அவர்களிடம் அழைத்துச்சென்றார். அவருடன் கூட, பிற்பாடு கர்த்தருக்குள் நித்திரையடைந்த தேவமனிதர் சகோ. இம்மானுவேல் அவர்களும் சிதம்பரம் என்னும் ஊரில் தற்போது உள்ள ஜீவமார்க்கம் அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் போதகர் ஜே. தாமஸ் அவர்களும், சகோதரர் போலீஸ் செல்லத்துரை அவர்களும் (இப்பொழுது அமெரிக்கா தேசத்தில் ஊழியக்காரராக இருக்கிறார்கள்) உபவாசம் இருந்து ஜெபித்துக் கொண்டு இருந்தனர்.

ஜெபம் முடிந்ததும் நான் மிகுந்த பசியுடன் இருந்ததை அறிந்து, அந்தப் போதகருடைய மனைவி எனக்குத் தேவையான ஆகாரத்தைக் கொடுத்தார்கள். அங்கு இருந்த சகோ. போலீஸ் செல்லத்துரை அவர்கள் சென்னை விமான நிலையத்தில் பணிக்குச் செல்ல வேண்டும் என்று கூறி அவசரமாகப் புறப்படும்போது, விமான நிலையத்தின் உட்பகுதிகளைச் சுற்றிக் காண்பிப்பதாகக் கூறி என்னையும் கூட அழைத்துச்சென்றார். ஊழியத்தின் பாதை என் சக்திக்கு மேல் பாரமானதாகவும், வேதனையாகவும் அப்போது எனக்கு இருந்தபடியால் நான் சோர்ந்துபோகக்கூடாது என்பதை அவர் உணர்ந்து என்னை சந்தோஷப்படுத்தும்படியாக அந்த சகோதரன் என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

### பழுதடைந்த ஆகாய விமானம்!

பயணம் செய்யவேண்டிய பயணிகள் எல்லாரும் கீழே இறக்கிவிடப்பட்ட நிலையில் விமான ஓடு தளத்தில் ஒரு பழுதடைந்த விமானம் நின்றுகொண்டிருந்தது. ஆண்டவர் அந்த இடத்தில் வைத்து நடக்கபோகும் காரியங்களை உன்னித்துக் கவனிக்கும்படி என்னை ஏவினார்.

சற்று நேரத்தில் பல இடங்களிலிருந்து பல பொறியியல் வல்லுநர்கள் வந்து பல விதங்களில் பழுதுகளைச் செவ்வைப்படுத்தினர். ஆனால் விமானம் இயங்கவில்லை. எனவே வேறு இடங்களிலிருந்து முதுநிலைப் பொறியாளர்களும், உதவியாளர்களும், வரவழைக்கப்பட்டார்கள். அவர்கள் பட்டப்பாடுகளும் விமானத்தின் எந்திரங்களைக் கையாண்ட விதங்களும் மிகவும் வியப்பளிப்பதாக இருந்தன. பிரயாணிகள் எல்லாரும் மிகவும் கூச்சலிட்டு, இந்த விமானம் எங்களுக்கு வேண்டாம், இந்த பழுதடைந்த விமானத்தில் நாங்கள் பயணம் செய்ய மாட்டோம் என்று அந்த விமானத்தைப் பற்றி கேவலமாகப் பேசினர்.

கடைசியாக, சுமார் மூன்று மணிநேர கடின உழைப்பின் பலனாக பழுதுகள் யாவும் சரியாகி விட்டன. பலமணி நேரம் கடும் வெயிலில் வேதனையோடுக் காத்திருந்த சிறியோரும், பெரியோருமான பயணிகள் யாவரும் விமானத்திற்குள் பிரவேசித்தனர். (நானும் அங்கு மற்றப் பயணிகளுடன் நீண்டநேரம் நின்றுகொண்டிருந்தபடியால் விமானப் பணியாளர்கள் என்னையும் விமானத்தில் ஏறச்சொன்னது ஒருவியப்பான காரியமாக இருந்தது).

மறுபடியும் தேவ ஆவியானவர், அந்த விமானம் நகர்ந்து செல்வதைக் கவனமாகப் பார்க்க என்னை ஏவினார். பழுதடைந்துப் போன நிலையில் ஆகாயத்தில் பறப்பதற்குத் தகுதியற்றது என்று கருதப்பட்ட அந்த விமானம் செயல்பட ஆரம்பித்தது. அது மெல்ல மெல்ல நகர்ந்தது. சற்று வேகமாக ஓட ஆரம்பித்தது. திடீரென்று பார்த்தால் தரைமீது அதிவேகமாக ஓட ஆரம்பித்து, ஓடு தளத்தில் அதிக தூரம் சென்று விட்டது. தொடர்ந்து கவனித்தபோது கண்ணிமைக்கும் நேரத்தில் அது தரையைவிட்டு மேலே எழும்பி உயரப் பறந்து சென்று விட்டது. என் பக்கத்தில் சில மணி நேரம் உதவாத நிலையில் நின்றுகொண்டிருந்ததும், பயன்பாட்டிற்கு உதவாதது என்றுக் கருதப்பட்டதுமான அந்த விமானம் ஆகாயத்தில் பறந்து கண்களுக்குத் தெரியாத உயரத்தில் தனது பாதையில் சென்று விட்டது.

### தேவன் பேசினார்!

"மகன் சாம், இன்று நீ இப்படித்தான் ஆதரவற்று, பழுதுபட்டு யாருக்குமே பயன்படாத பாத்திரமாக இருக்கிறாய். உன் இருப்பிடத்திற்குச் சென்று சேர இன்னும் வெகுதூரம் நீ நடக்கவேண்டும். விசுவாசத்துடன் நடந்து செல், நீ பார்த்தப் பழுதடைந்த விமானத்திற்கு ஒப்பாக உன்னையும் பழுதுபார்த்து, செப்பனிட்டு, என் விருப்பப்படி கால அவகாசம் எடுத்து ஏற்றவேளையிலே உன்னை ஆசீர்வதிப்பேன். நீ பார்த்த ஆகாயவிமானம் எப்படி ஏராளமான ஜனங்களை தூக்கி சுமந்து

சென்றதோ அதேப்போல் உன்னையும் பலருக்கு பயன்தரும் கருவியாய் மாற்றுவேன். பயப்படாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்" என்று தேவன் என்னை தைரியப்படுத்தினார்.

அப்படியே நான் என் இருப்பிடத்திற்கு சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து சேர்ந்தேன். என் கஷ்டக் காலத்தில் தேவன் சொல்லிய வார்த்தைகள் அனைத்தும் இக்காலத்தில் நிறைவேறியுள்ளன.

அன்பு நண்பரே, இன்றைய வறுமை, எதிர்ப்பார்ப்புகள், பாரங்கள் இவற்றினால் அதிகமாக நீங்கள் இளைத்துப்போனீர்களோ? பயப்பட வேண்டாம். **நீங்களோ கர்த்தரின் ஆசாரியரென்று சொல்லப்படுவீர்கள்; உங்களை நமது தேவனுடைய பணிவிடைக்காரரென்பார்கள்; நீங்கள் ஜாதிகளின் செல்வத்தை அநுபவித்து, அவர்கள் மகிமையைக்கொண்டு மேன்மை பாராட்டுவீர்கள்.** ஏசாயா 61:6.

************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

**அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள்** மத்தேயு 13:27. தூக்கத்தில் இருந்த ஊழியர்கள் களைகள் எங்கிருந்து வந்தன என்று யோசித்தார்கள். அது அவர்களுக்கு பரிச்சயமானதாகத் தெரியவில்லை. நாமும் 'என் வாழ்க்கையில் இது ஏன் நடந்தது?' 'எங்கிருந்து வந்தது?' என்று எத்தனை முறை கேட்கிறோம்.

### இது எனக்கு ஏன் நடக்கிறது?

விதைகளை விதைப்பதைத் தவிர உரிமையாளர் வேறு எதையும் செய்யவில்லை என்பதை அவர்கள் சிறிதும் உணரவில்லை. தேவன் எப்போதும் நமக்கு சிறந்ததைச் செய்கிறார். அப்படி நாம் உணராதபோதும், அவர் மேலிருந்து வரும் கிருபைகளை நமக்குத் தருகிறார்.

**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.** யாக்கோபு 1:17

சில சமயங்களில், கர்த்தருக்குப் பிரியமில்லாத வாழ்க்கையை நடத்துபவர்கள், முழு இருதயத்தோடும், மனதோடும், ஆன்மாவோடும் அவரைச் சேவிப்பவர்களை விட ஏன் அதிக பாக்கியவான்களாகத் தெரிகிறார்கள் என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். தேவபிள்ளையாக நான் ஏன் துன்பப்படுகிறேன், மற்றவர்கள் ஒழுக்கக்கேடாக வாழ்ந்தாலும் தங்கள் வாழ்க்கையை அனுபவிப்பதுபோல் தோன்றுகிறார்கள்? பதில் தெளிவாக உள்ளது. **அவர்கள் வளரட்டும்.**



**உரிமையாளரின் பதில் - "அவர்கள் வளரட்டும்."**

தேவன் இரக்கமுள்ளவர். அவரது கிருபை நம் கற்பனைக்கு அப்பாற்பட்டது. அவர் மக்களுக்கு மாற்றுவதற்கான நேரத்தையும், வாய்ப்பையும் தருகிறார். அவர் நீதிமான்கள் மற்றும் அநீதிமான்கள் இருவரின் மீதும் சூரியனைப் பிரகாசிக்கச் செய்கிறார். ஆனால், ஒருநாள் அந்த அறுவடைக் காலத்தில் எல்லாம் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படும்.

## 6. அறுவடை காலத்தில்!

வேலைக்காரர்கள் கோதுமையிலிருந்து களைகளை வேரோடு பிடுங்க விரும்பியபோது, உரிமையாளர் **வேண்டாம்** என்றார். இரண்டும் வளரும்போது, தெளிவான வேறுபாடு எதுவும் காணப்படவில்லை. இருப்பினும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். கோதுமை மற்றும் களைகள் இரண்டும் அறுவடையை எதிர்கொள்ளும் நாள். – நியாயத்தீர்ப்பு நாள். நியாயத்தீர்ப்பு சிம்மாசனத்தின் முன் நிற்கும்போது, வேறுபாடு வெளிப்படும்.

**... வேண்டாம். களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைக் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான்** ... மத்தேயு 13:29–30.

எனவே, இன்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளவேண்டிய கேள்வி: நாம் எந்த கட்டுகளைச் சேர்ந்தவர்கள்?

தேவன் நம்மை மிகவும் ஆழமாக நேசிக்கிறார். நித்திய மரணத்திற்கு விதிக்கப்பட்ட கட்டுக்குள் யாரும் சேர்க்கப்படுவதை அவர் விரும்புவதில்லை. **அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.** மத்தேயு 13:42. அதனால்தான் இயேசு கிறிஸ்து உலகிற்கு வந்தார். கல்வாரி சிலுவையில் நம் பாவங்கள், சாபங்கள், நோய்கள், நம்பிக்கையின்மை மற்றும் வெறுமையைச் சுமக்க, அவர் நமக்காக மரித்தார். அவர் மரணத்தை ருசித்தார். மரணம் அவரைப் பிடித்து வைக்க முடியாததால், அவர் மூன்றாம் நாளில் மீண்டும் உயிர்த்தெழுந்தார். அவர் ஒரு வெற்றியாளரை விட மேலானவர் என்பதை நிரூபித்தார்.

அவர் வாக்குத்தத்தம் செய்தபடி, உலகத்தை நியாயந்தீர்க்க அவர் ராஜாதி ராஜாவாக மீண்டும் வருவார். நித்திய தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான ஒரே வழி, இயேசு கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரை நம் வாழ்வின் ஆண்டவராக அறிவித்து நாம் அவருக்குச் சொந்தமாவதே. இதுவே அல்லாமல் வேறு வழி இல்லை.

வேதாகமம் கூறுகிறது: **அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.** மத்தேயு 13:43.

நாம் அவருக்காக பிரகாசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

### உண்மையான கேள்வி என்னவென்றால்:

**நாம் அவருக்காக பிரகாசிக்க ஆயத்தமாக இருக்கிறோமா? நாம் கோதுமையா அல்லது களைகளா? நாம் விழித்திருக்கிறோமா? அல்லது தூங்குகிறோமா?**

************

## அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

– ஆசிரியர்

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### 2. Bank : ICICI Bank

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### 3. Bank : State Bank of India

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

☆ வருட சந்தா ரூ. 100/– ☆ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல் : (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th OCTOBER 2025**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**